

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

ப.பிரதாப்



"
காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை
"

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 8193379638-1
9 788193 796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்
ப. பிரதாப்

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
அக்டோபர், 2019

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1
9788193796382

# 51. குறுந்தொகையில் சூழலியல்

**நா.ரம்யா**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி,
பொள்ளாச்சி.

சூழலியல் என்பது இன்று வெகுவாக வளர்ந்து வருகின்ற ஒரு துறையாகும். தமிழிலேயே அறிவியல் தமிழ் கணினித் தமிழ் என்று வளர்ந்து வருகின்ற நிலையிலும் சூழலியல் தொடர்பான சிந்தனை துறை இன்னமும் தொடங்கவில்லை என்று கூறலாம். சூழலியல் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் தாவரம் விலங்குகள் பற்றிய அறிவியல் துறையானது சூழலுக்கும் உயிரினங்களுக்கும் இடையிலான உறவை ஆராயும் ஒரு துறையாக வளர்ச்சி கண்டுள்ளது. சங்க இலக்கியங்கள் பொதுவாகவே முதல் கரு உரி பொருட்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஒவ்வொரு செயலும் ஏதேனும் ஒரு நிலத்தை அல்லது அது சார்ந்த கருத்துக்களை பின்புலமாகக் கொண்டு உரிப்பொருளை விளக்குகின்றன. சூழலியல் தொடர்பான சிந்தனையானது மனிதனின் அவைகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. இதன் விளைவாகவே நிலம், நீர், வளி, ஒளி மற்றும் உணவு மாசடைதல் என சிந்தனை துறை அறிவித்துள்ளது. சங்கத் தமிழர் தாம் வாழும் நிலத்தையும் பொழுதையும் நிற்கும் செடியையும் எதையுமே தம்முடைய அகவாழ்வுக்கு புறமாகக் கருதவில்லை. தமிழரின் இத்தகைய சுழலியல் அறிவு இன்றைய சூழலில் அறிஞர்களின் கூற்று பொருத்திப் பார்க்கும் ஆய்வு வளர்த்தெடுக்கப்பட வேண்டும். சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இன்று புல அறிவியல் இயக்கங்கள் ஓர் இயக்கமாக ஏற்படுத்தி வருகின்றன. ஆனால் 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழரின் சூழலியல் தொடர்பான சிந்தனைகள் மிகுந்த குறிப்பாக குறுந்தொகையின் நிறைவாக கண்டுணரலாம்.

### நிலச் சுழல்

சூழலில் உயிரினம் வாழ்வதற்கு அடிப்படையானது நிலமாகும். நிலத்தின் இயல்புகளுக்கு ஏற்ப வாழ்க்கை முறையும் அமைந்திருந்தன. பண்டைத் தமிழரிடையே நானிலம் பற்றிய கருத்துக்கள் நிலவி அமைக்க அவர்களது வாழ்க்கை அதனை ஆதாரமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டமையே காரணம் எனலாம். குறுந்தொகைப் பாடல்கள் பாடிய புலவர்கள் பற்றிய சிந்தனைகள் இருந்துள்ளன இதற்கான சான்றுகளை பின்வருமாறு நோக்கலாம்.

தலைவன் தலைவியைப் பிரிந்து செல்கின்றான். பிரிவுத் துயரால் துன்புறும் தலைவி தனது தோழியிடம் துயரைப் பகிர்ந்து கொள்ளும் வேளையில் தலைவன் பாலைவனத்தைப் பற்றி பின்வருமாறு விவரிக்கிறான்.

"பொலங்கல ஒருகர் ஏய்க்கும்
நிலம் கரி கள்ளி அம்காடு இறந்தோரே"

என்ற பாலைத்திணை பாடலில் அந்நிலம் பாலையானமைக்கு கடும் வெம்மையே காரணம் எனவும், அதன் நிறமும் கரியாக திரிபடைந்து போனது பற்றியும் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

மேலும், தலைவன் தன்னை பிரிந்த நிலையில் தலைவி அவனை கண்டு பிடிக்கும் முயற்சியில் அப்போது தோழி அவளுக்கு ஆறுதல் கூறுகின்றாள். கூறுகின்றபோது "**நிலம் தொட்டுப் புகாஅர்**" என்று உரைக்கின்றாள். அதுபோல் நிலத்தைத் தோண்டி போயிருக்க மாட்டான் என்று கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இதன் ஊடாக நிலத்தை தோண்டும் சங்கதிகள் இடம்பெற்றிருப்பது புலப்படுத்துகின்றது.

### வளி மாசடைதல்

உயிரினங்களின் உயிர் வாழ்வுக்கு மிகவும் அவசியமானது காற்று ஆகும். காற்றின் அவசியம் முக்கியத்துவம் வகைகள் என்பன இன்றைய விஞ்ஞானத்தில் நன்கு ஆராயப்படுகின்றன. இதனால்தான் இன்று ஓசோன் துவாரம்

அமிலமழை ஒட்சிசனின் அவசியம் போன்றவை பற்றிய விழிப்புணர்வு மொழி இனம் தேசம் தாண்டி உலகளாவிய ரீதியில் அனைத்துத் தரப்பினரிடமும் வலியுறுத்தப்படுகிறது. எது எவ்வாறாயினும் பழந்தமிழரிடையே காற்று தொடர்பான சிந்தனைகள் இருந்துள்ளன.

வேட்டை நாய்கள் நீரில் கலந்து நீர் மாசடைந்து என்று மேலே காட்டப்பட்டுள்ள செய்யுளில் வளி மாசடைதல் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறெனில் நீர்நிலைகள் நாற்றம் எடுத்தது என்றும் அந்த நாற்றம் எங்கும் நிலவியதாகத் தலைவன் கூறுவதாக அமைந்துள்ளது. சிறுநீர் என்பது மொழி என்ற சொல்லிற்கு துர்நாற்றம் என்பது பொருள். அந்த வகையில் காற்று மாசடைவது தொடர்பான அறிவு அக்காலத் தமிழரிடையே நிலவி உள்ளமையைக் காணலாம். மேலும்,

"இவளே.....

நிலவும் இருளும் போலப் புலவுத்துரைக்

கடலும் கானலும் தோன்றும்

மடல் தாழ் பெண்ணை எம் சிறு நல் ஊரே"

எனும் குறுந்தொகைப் பாடலில் புலவுத்திரை என்பது புலால் நாற்றம் வீசும் அலைகளை உடைய கடல் என்று குறிப்பிட்டுள்ளதை காணலாம். மரம் வெட்டுதல் தொடர்பான கருத்துக்களும் குறுந்தொகையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### ஒலி மாசடைதல்

ஒலி என்பது இயற்கை ஒலி பேச்சு இசை என்ற வகையில் எடுத்துக் கொள்ளலாம். இந்த ஒலியானது எவ்வாறு அல்லது எப்போது மாசடைகின்றது என்றால் ஓர் உயிரினம் எழுப்பும் ஒலியானது பிற உயிரினங்களின் நடத்தைகளை தாக்கத்தை ஏற்படுத்தும் ஒலி மாசடைதல் எனப்படும். சங்கச்செய்யுட்களில் ஒலி மாசு பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. ஆரியர் கயிற்றின் மேல் நின்று ஆடும் போது பறை கொட்டுகிறார்கள். பாலைவனத்தில் எழும் சூழல் காற்றின் ஓசை ஒப்பிடுகிறார். இவை

இரண்டின் பேரிரைச்சல் அச்சத்தையும் கலக்கத்தையும் ஏற்படுத்துவதாக விபரிக்கிறார்.

"ஆரியர்

கயிறு ஆடு பறையின் கால் பொரக் கலங்கி

வாகை வெண் நெற்று ஒலிக்கும்"

என்ற செய்யுளில் ஓசை அதிர்வினால் சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றம் குறிப்பாக ஒலி மாசடைதல் குறிப்பிடப்பட்டுள்ளது. தலைவன் பிரிய எண்ணுவதை அறிந்த தலைவி தோழியை நோக்கி பாலைவன வழிகள் கொடுமையானது எனத் தெரிந்தும் அவர் என்னை பிரிய நினைத்து ஒருவரிடமும் அருள் இல்லாமையின் விளைவு எனக் கூறுகிறாள். செடியின் காய் வெடிக்கும் சத்தம் கேட்டு சோடிப் புறாக்கள் பறக்கும் என உரைக்கிறாள்.

"பெயன்மழை துறந்த புலம்புறு.....

....    .....    ...

..துணைப்புற விரிக்கும்"

என்னும் செய்யுளிலே இணை விளைச்சியில் ஈடுபடும் புறாக்கள் கல்லிக்காயின் அரவங்கேட்டு பிரிந்தன என்று கூறப்படுகின்றது. இதனூடாக புலவனுக்கு ஒளி பற்றிய எண்ணமும் சிந்தனையும் உயர்வாக இருந்திருக்க வேண்டும். இதன் காரணமாகவே நுண்ணிய ஒலி குறிப்பையும் பதிவு செய்து செய்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது. அது போலவே மணி மருள் புவின் பாடு நனி கேட்டே என்று சொல்லும் முன்னே ஒலிக்குறிப்பு பதிவு செய்துள்ளார்.

**உணவு மாசடைதல்**

இன்றைய காலகட்டத்தில் ஒரு வேளை உணவின்றி மத்திய ஆப்பிரிக்க நாடுகளில் பலர் மடிந்து போவதை காண்கின்றோம். உணவு மிக முக்கியமான பிரச்சனைகளை உணவை வீண் விரையம் செய்து உணவுப் பழக்க வழக்கங்களை குறிப்பிடலாம். தகுந்த முறையில் சேகரித்தும் பாதுகாத்தும் பயன்படுத்தும் உணவுப் பண்பாட்டில் மிக முக்கியமானவை.

இத்தகைய சிந்தனைகள் பழந்தமிழரிடையே இருந்துள்ளமைக்கு பல்வேறு குறுந்தொகைப் பாடல்கள் சான்றாகக் காட்டலாம்.

நல்ல பசுவின் இனிமையான பாலானது அப்பசுவின் கன்றினாலும் உண்ணப்படாமல் பாத்திரத்திலும் இல்லாமல் தரையில் வீணாகிப் போவதாக வருந்துகிறார்.

"கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல் ஆன் தீம் பால் நிலத்துக்கா அங்கு"

மேலும் வேலன் வெறியாடும் கழுத்திலே செந்நெல்லின் வெண்மையான பொருள் எங்கும் சிதறியிருந்த செய்தி கூறுகின்றது.

"வேலன் புனைந்த வெறியர் கலந்தொரும்
செந்நெல் வான் பொரி சிதறியன்ன"

என்ற பாடலிலும் இச்சிந்தனை வெளியிட்டிருப்பதைக் காணலாம்.

முடிவுரை

குறுந்தொகைப் பாக்களில் பழந்தமிழ்ப் புலவர்கள் நிலம், நீர், வளி மாசடைதல் குறித்த பதிவுகளையும் சூழலில் அவர்கள் எழுதியிருந்த விழிப்புணர்வையும் பல சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது. பண்டைத் தமிழர் மத்தியில் காணப்பட்ட சிந்தனைகளை ஆதாரமாகக் கொண்டு நின்று ஆராயப்பட வேண்டும். அவ்வாறு ஆராய்வதன் மூலம் முன்னோரின் அறிவியல் சிந்தனைகள் வெளிக்கொணரப்படும் சூழலியல் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுத் தரும்.